தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 04.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.CP 3113/F/2024 & CP 3112/F/2024

திரு.N.ராமச்சந்திரன் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி-606201.

ஆணை-II

இவ்வாணையம் 25.08.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.பி.நடராஜன், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், கள்ளக்குறிச்சி (தற்போது உதவி ஆணையர் (கலால்), சேலம்) மற்றும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திருமதி.த.தனலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சின்னசேலம் (தற்போது கண்காணிப்பாளர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், கள்ளக்குறிச்சி) மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் திருமதி.பா.நிறைமதி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சின்னசேலம் ஆகியோர் 04.11.2026 இன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்கள். மேலும் மனுதாரர் சட்டப்பிரிவு 2(j)ன் கீழ் களஆய்வு செய்து தேவையான தகவல்களை பெற்றுக்கொண்டதாகவும் அதற்கான ஆவணங்களையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தற்போதைய பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் ஏற்கிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.பி.நடராஜன், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களது எழுத்துமூல

விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திருமதி.த.தனலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களது விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து ஆணையம் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

(i) **"மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள 11.03.2024 நாளிட்ட மனுவினை சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மாற்றம் செய்த மனுவினைப்பெற்றும் அதற்கு தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திருமதி.த.தனலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005, சட்டப்பிரிவு 20(1)- கீழ் அபராதம் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை அப்போதைய பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் 02.12.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது".**

ஓம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். CP 3113/F/2024 & CP 3112/F/2024</u>

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு:-</u>

பொதுத்தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி-606201.

அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி-606201.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
கள்ளக்குறிச்சி.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

<u>புகார்தாரர்:-</u>

திரு.நா.ராமச்சந்திரன்,
எண்.625, சேலம் மெயின்ரோடு,
நயினார்பாளையம் கிராமம்,
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி-606301.

Copy to file: KR/PA